கோவிட்-19 தடுப்பூசி

# உண்மைகளைப் பெறுக.

## ஊடுருவல் தொற்றுகள்

### கோவிட்-19 ஏற்படும் பெரும்பாலானோர் தடுப்பூசி பெறாதோரே.

தடுப்பூசி பெற்ற பின் ஆட்களுக்கு கோவிட்-19 ஏற்படுவது வழமைக்கு மாறானது, ஆனால் அது நிகழலாம். விஞ்ஞானிகள் இதை ஒரு “ஊடுருவல் தொற்று” என்கின்றனர்.



### தடுப்பூசிகள் கடுமையான சுகவீனத்துக்கு எதிராகப் பாதுகாக்கின்றன.

ஊடுருவல் தொற்றுகள் நிகழும் போதும், தடுப்பூசி பெற்ற கிட்டத்தட்ட எல்லோரையும் கடுமையாக நோயுறாமல் அல்லது இறந்து விடாமல் தடுப்பூசி பாதுகாக்கிறது.



### கோவிட்-19 தடுப்பூசிகள் பாதுகாப்பானவை.

தடுப்பூசி வெவ்வேறு வண்ணங்கள், இனங்கள், வயதுகள் என்பவற்றைச் சேர்ந்த பல நூறு மில்லியன் பேருக்குப் பாதுகாப்பானதென எண்பிக்கப்பட்டுள்ளது. மிதமான பக்க விளைவுகள் சாதாரணமானவையாக இருக்கும் அதே வேளை, தடுப்பூசியினால் கடுமையான பக்க விளைவுகள் ஏற்படுவது அரிதானதாகும், அவையுள்ள பெரும்பாலானோர் குணமடைகின்றனர்.

### கோவிட்-19 தடுப்பூசிகள் நன்கு செயற்படுகின்றன.

உங்களையும் உங்களது குடும்பத்தையும் உங்களது சமூகத்தையும் பாதுகாக்க ஆகச் சிறந்த வழி முழுமையாகத் தடுப்பூசி பெற்றிருப்பதாகும்.



நீர் முழுமையாகத் தடுப்பூசி பெற்றவராயின், உமக்கு கோவிட்-19 தொற்றி அன்புக்குரியோருக்குப் பரவுவது அசாத்தியமானது.



### நீர் ஊடுருவும் தொற்றுகளைத் தடுக்கலாம்

நீர் தடுப்பூசி பெற்றவராக இருந்த போதிலும், நீர் ஒரு முகமூடியை அணிந்தால் நீரும் உமது குடும்பமும் ஆகப் பாதுகாப்படையலாம்.

சமூக இடைவெளியைப் பழகுதல், பலருடன் ஒன்று சேர்வதைத் தவிர்த்தல், உங்களது கைகளை அடிக்கடி கழுவுதல் என்பன உம்மையும் மற்றோரையும் பாதுகாப்பாக வைத்திருக்கும் ஏனைய வழிகளாகும்.

**உங்களைப் பாதுகாருங்கள். உங்கள் சமூகத்தைப் பாதுகாருங்கள். தடுப்பூசி பெறுக.**

NRC-RIM
National Resource Center for Refugees, Immigrants, and Migrants

இன்னும் தகவல்களுக்கு: cdc.gov/coronavirus